පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක: 79

ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, අනුරාධපුර

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்ற வெளியீட்டுத் தொகுப்பு இலக்கம் : 79

நிறுவனத்தின் பெயர் : மாவட்ட செயலகம், அநுராதபுரம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டலள இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

Parliament Publication Collection No: 79

Name of the institution : District Secretariat, Anuradhapura

Submission of observation of Hon. Minister and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No 119(4)

இலங்கை பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவினால் சபைப்படுத்தப்பட்ட நிலையியற் கட்டளை 119 (4) தொடர்பாக அவதானிப்புகள் மற்றும் எடுக்கப்படும் நடவடிக்கைகள பாராளுமன்றிற்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொகுப்பு இலக்கம் : 79

மாவட்ட செயலகம் - அநுராதபுர மாவட்ட செயலகம்

அ.க.குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்	கணக்கீட்டு உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கை	தற்போதைய மதிப்பீடு
2004.05.11 ஆம் திகதிய 171/2004 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை பிரகாரம் அரசாங்க சம்பளம் தயாரிக்கும் கணனி மென்பொருளுக்குறிய முதலாம் இரகசிய குறியீடு கணக்காளர் அல்லது பதவி நிலை உத்தியோகத்தர் மாத்திரம் பயன்படுத்தவில்லை.	முதலாம் இரகசிய குறியீடு கணக்காளரினால் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதுடன், விடயத்துக்கு பொருப்பான உத்தியோகத்தரினால் இரண்டாம் இரகசிய குறியீடு பாவிக்கப்பட்டது.	சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.
வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரிக்கப்படவிலலை.	சிய 2022 ஆம் வருடத்தின் வரவு செலவு ஒதுக்கீட்டின் மூலம் அனுமதிக்கப்பட்ட பல கருத்திட்டங்கள் அந்த கால கட்டத்தில் நாட்டில் காணப்பட்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூக பிரச்சினை காரணமாக முழுமையாக நிறுத்தப்பட்டதுடன் சில செயற்றிட்டங்களின் அப்போது வேலை ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டது. இந்த தகவல்களை மையப்படுத்தி 2022 ஆம் வருடத்தின் செயற்பாட்டு திட்டம் தயாரிக்கவில்லை என்பதுடன் இருப்பினும் 2022 ஆம் வருடத்திற்கான இறுதி மதிப்பீட்டு அறிக்கை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.	தற்போது 2024 ஆம் வருடத்திற்குரிய வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.		
2017.06.26 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின்படி 2018 ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பயன்பாடுத்தாததது பற்றிய தகவல்கள் கொம்ஜரோலர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை	2022 ஆம் வருடத்தில் பயன்பாடற்ற அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் 2022 ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் தொடர்பான தகவல்கள் எனது இலக்கம் ANU/DIST/2/19/1/B/1 மற்றும் 2022.12.31 ஆம் திகதிய கடிதம் மூலம் கொம்ப்ரோலர நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	01/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைப் பிரகாரம் வருடத்தில் கொள்வனவு செய்யும் சொத்துக்கள் மற்றும் பயன்பாடற்றவை தொடர்பான தகவல்கள் கொம்ப்ரோலர் நாயக அலுவலகத்திற்கு வருடாந்தம் சமர்ப்பிக்க நடிவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வானகமொன்று பயன்பாட்டிலிருந்து ஒதுக்கி 06 மாதங்களுக்கு குறைவான காலத்தில் பயன்பாட்டிலிருந்து அப்புரப்படுத்தவில்லை.	பயன்பாட்டிலிருந்து ஒதுக்குதலுக்குரிய 13 வாகனங்களில் 06 வாகனங்கள் பயன்பாட்டிலிருந்து ஒதுக்குவதற்கான நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டுள்ளது. பின்வரும் 07 வாகனங்கள் பயன்பாட்டிலிருந்து ஒதுக்க வேண்டியுள்ளது. அது தொடர்பில் பின்வரும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. GI-7329 - துவிச்சக்கர வண்டி 50-0305 - டபள்கெப் வண்டி 43-3017 – லொரி பவுசர் 43-2967 - லொரி பவுசர் 31-6753 – மோட்டார் வண்டி NC MY-8024 } இரானும் கையளித்த NCMY -8028 } துவிச்சக்கர வண்டி	பயன்பாட்டிலிருந்து ஒதுக்க அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், பத்திரிகை விளம்பரம் ஒன்றின் மூலம் பகிரங்கப்படுத்தி விரைவில் பயன்பாட்டிலிருந்து ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
	மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய மீண்டும் மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த 05 வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த அறிக்கை அனுமதிக்காக அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டு 2024.08.12 ஆம் திகதி அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. 50 -0305 கெப் வண்டி மாவட்ட செயலாளரின் பெயரில் பெற்றுக்கொள்ள தேவையான ஆவணங்களை கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்கு அனுப்பபட்டுள்ளது.	

ஒரு வருடத்திற்கு அதிகமான காலத்திலிருந்து இருக்கும் மீதிக் கடன் நிலுவை காணப்பட்டது.	ஒரு வருடத்திற்கு மேல் கடன் நிலுவை சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதி, சேவையிலிருந்து விலகிய உத்தியோகத்தர்களின் கடன் மீதி, ஓய்வு பெற்ற மற்றும் இறந்த உத்தியோகத்தர்களினதும் கடன் மீதி உள்ளடங்குவதுடன் வெவ்வேறாக அந்தந்த கடன் மீதி இருக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	<u>சேவை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன் மீதி</u> திரு ஆர்.பீ.பீ.கே.ரத்னவீர கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலகம் மத்திய நுவரகம் பலாத சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இவ் உத்தியோகத்தரினால் கொடுப்பனவு செய்யப்படாமலுள்ள கடன் மீதியை பெற்றுக்கொள்வதற்கு உத்தியோகத்தருக்கு எதிராக 00495/M/21 இலக்கத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அநுராதபுர மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் 2024.06.19 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டதுடன் அது மீண்டும் 2024.10.04 ஆம் திகதி விசாரணைக்கு திகதி குறிக்கப்பட்டுள்ளது. திரு ஆர்.எச்.கே.வன்னிநாயக்க கிராம உத்தியோகத்தர் இபலோகம பிரதேச செயலகம் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இவ் உத்தியோகத்தரினால் கொடுப்பனவு செய்யப்படாமலுள்ள கடன் மீதியை பெற்றுக்கொள்வதற்கு உத்தியோகத்தருக்கு எதிராக 30483/M இலக்கத்தின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அநுராதபுர மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் 2022.11.19 ஆம் திகதி இந்த உத்தியோகத்தர் மரணமடைந்துள்ளார். உத்தியோகத்தர் மரணமடைந்துள்ளதால் எதிர்காலத்தில் அவரது கடன் மற்றும் எஞ்சிய வட்டியை விதவை மற்றும் அநாதைகள் நிதிய கொடுப்பனவில் பெற்றுக்கொள்ளபடவுள்ளது.
		திரு எச்.டப்.டீ.ஜயசிங்ஹ தொழிநுட்ப உத்தியோகத்தர் பிரதேச செயலகம் பதவிய சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த உத்தியோகத்தரினால் கொடுப்பனவு செய்யப்படாமலுள்ள கடன் நிலுவையை 2023.11.30 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துமாறு எனது ANU/DIST/2/7/2/B/37 இலக்க

		மற்றும் 2023.11.23 ஆம் திகதி கடிதம் அனுப்பபட்டுள்ளதுடன் எனது அதே இலக்க மற்றும் 2024.01.03 ஆம் திகதி கொடுப்பனவு செய்யாமலுள்ள கடன் நிலுவையை செலுத்துமாறு உரிய உத்தியோகத்தரை தெளிவுபடுத்துமாறு அறிவுறுத்தி உத்தியோகத்தரின் துணைவியார் புகையிரத இலிகிதர் திருமதி எம்.பீ.எஸ். லசன்தி திலகரத்னவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இருப்பினும் உத்தியோகத்தரினால் கடன் நிலுவை செலுத்த தவறுவதால் சட்டமா அதிபரின் ஆலோசணை பெறப்படவுள்ளது. திரு டீ.பீ.அனுர கிராம உத்தியோகத்தர் பிரதேச செயலகம் நொச்சியாகம சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த உத்தியோகத்தரினால் கொடுப்பனவு செய்யப்படாமலுள்ள கடன் நிலுவையை செலுத்துமாறு குறிப்பிட்டு நொச்சியாகம பிரதேச செயலாளரினால் பல சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தரை தெளிவூட்டியுள்ளதுடன், எனது ANU/DIST/2/7/2/B/38 இலக்க மற்றும் 2024.04.15 ஆம் திகதி கடிதம் மூலம் 14 தினங்களுக்குள் கடன் நிலுவையை செலுத்துமாறு அறிவித்தும் மேலும் செலுத்த தவறுவதால் சட்டமா அதிபரின் ஆலோசணை பெறப்படவுள்ளது. <u>சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவை</u> திருமதி கே.எம்.கே.காங்கர மெணிகே பலுகஸ்வெவ பிரதேச செயலகம் சேவையிலிருந்து இடைவிலகிய முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் திருமதி கே.எம்.கே.காங்கர மெனிக்கேவிடமிருந்து அறவிட வேண்டிய கடன் நிலுவை மற்றும் மீதி வட்டியை குறித்த உத்தியோகத்தரினால் 2023.03.23 ஆம் திகதி 595396 இலக்கமுடைய மற்றும் 2023.04.20 ஆம் திகதி 595467 ஆம் இலக்க பற்றுச்சீட்டு மூலம் பலுகஸ்வெவ பிரதேச செயலாளருக்கு முழுமையாக செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது.

		ஓய்வு பெற்ற மற்றும் இறந்த உத்தியோகத்தர்களின் கடன் நிலுவை திருமதி எச்.எம்.எம்.ஆர்.கே.ஹேரத் பிரதேச செயலாளர் கல்னவ பிரதேச செயலத்தில் சேவையாற்றும் போது ஓய்வு பெற்ற இந்த உத்தியோகத்தரின் கடன் பற்று 2024 ஏப்ரல் மாதத்தினுள் உத்தியோகத்தரின் ஓய்வுதிய பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட்டுள்ளது.
மாதாந்தம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடாத்தப்படவில்லை.	2022 ஆம் வருடத்தின் முதல் காலத்தில் நாட்டில் காணப்பட்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூக முரண்பாடு காரணமாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடாத்த கௌரவ இணை தலைவர்கள் நாள் வழங்காமை காரணமாக குழு நடாத்தப்படவில்லை. இருப்பினும் கௌரவ ரணில் விக்ரமசிங்ஹ அவர்கள் ஜனாதிபதியானதன் பின்னர் காணப்பட்ட அரசியல் இஸ்தீரமற்ற தன்மை இல்லாமல் போன பின்னர் 2022.10.11 ஆம் திகதி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடாத்தப்பட்டது. அதே போன்று வருட இறுதியில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடக்காமையினால் அபிவிருத்தி மதிப்பீடு மற்றும் பிரச்சினை கலந்துரையாட தேவை காணப்படாத காரணமாக மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடாத்துவதற்கும் தேவை ஏற்படவில்லை.	2023 ஆம் வருடத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் 03 மற்றும் 2024 ஆம் வருடத்தில் தற்போது வரைக்கும் குழு கூட்டம் 02 உம் நடாத்தப்பட்டுள்ளது.
மாவட்ட செயலாளரினால் நடாத்தப்படும் பிரதேச செயலாளர் மாநாடு மாதாந்தம் நடாத்தப்படவில்லை.	02 பிரதேச செயலாளர் மாநாடு 2022.01.28 மற்றும் 2022.03.04 ஆகிய தினங்களில் நொச்சியாகம மற்றும் மதவாச்சி ஆகிய பிரதேச செயலகங்களில் நடாத்தப்பட்டது. அந்த வருடத்தினுள் நாட்டில் காணப்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதார இஸ்தீரமற்ற நிலை காரணமாக அத்தியவசிய சேவைகளை செயற்படுத்த முன்னுரிமை அளித்தமையினால் பிரதேச செயலாளர் மாநாடு நடாத்துவது மட்டுப்படுத்தப்பட்டது.	2023 ஆம் வருடத்தில் பிரதேச செயலாளர் மாநாடு 05 மற்றும் 2024 ஆம் வருடத்தில் தற்போது வரை ஒரு பிரதேச செயலாளர் மாநாடு நடாத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதி தேர்தல் நடாத்த வெளியிடப்பட்டுள்ளதால் தேர்தல் அலுவல்கள் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளதால் தேர்தல் பிற்பாடு மீண்டும் நடாத்தப்படவுள்ளது.
மாவட்ட வீடமைப்பு குழு மாதாந்தம் கூட்டப்படவில்லை.	மாவட்ட வீடு அபிவிருத்தி குழு மதிப்பீட்டு கலந்துரையாடல் செய்வதற்கு வீடமைப்பு அதிகார சபையினால் இந்த குழு நடாத்தப்படுவதுடன் ஆதலால் அந்த நிறுவனத்தின் வேண்டுகோளின் பிரகாரம் குழு	2023 ஆம் வருடத்தில் வீடமைப்பு நிர்மாண அலுவல்கள் தொடர்பில் ஒதுக்கீடு செய்யப்படாமை காரணமாக வீடமைப்பு குழு மாதாந்தம் நடாத்துவது தேவையில்லை என வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட

	நடாத்தப்படுகிறது. அதன்படி 2022 வருடத்தில் வீடமைப்பு அபிவிருத்தி குழு கூட்டம் இரண்டு நடாத்தப்பட்டுள்ளது.	முகாமையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளதால் தேவையான போது குழு கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் தற்போது வரை ஒரு கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது.
மாவட்ட பசளை ஒருங்கிணைப்புக் குழு மாதாந்தம் கூட்டப்படவில்லை.	மாவட்ட பசளை குழு போகம் ஆரம்பத்துடன் நடாத்தப்படுவதுடன், அதனால் பயிர் நிலத்தின் அளவு மற்றும் தேவையான பசளை அளவு தீர்மானிக்கப்படுகிறது. மாதாந்தம் நடாத்தப்படும் மாவட்ட விவசாய குழு கூட்டத்தில் மேலய பசளை குழு தொடர்பான சகல உத்தியோகத்தர்கள், விவசாய பிரதிநிதிகள் பங்குபற்றுவதால் அங்கு பசளை தொடர்பான பிரச்சினை மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகிறது. ஒரு போகத்தினுள் குறைந்தளவு பசளை விநியோகிக்கும் நிறுவனங்கள் மற்றும் பிரதேசங்களில் விற்பனை செய்யும் விற்பனை முகவர்களுடன் கூட்டம் நடாத்தப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விசேட தேவை ஏற்படும் போது பசளை குழு கூட்டம் நடாத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	கூட்டம் நடாத்துவதற்கு ஒதுக்கீடு குறைக்கப்பட்டுள்ளதாலும், உத்தியோகத்தர்களின் மற்றும் குழு பிரதிநிதிகளின் போக்குவரத்து வசதிகள் வழங்கும் போது ஏற்பட்ட பிரச்சினை காரணமாக மேலய கூட்டம் நடாத்துவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் தற்போது 2024 ஆம் வருடத்தில் குழு கூட்டம் 02 நடாத்தப்பட்டுள்ளது.
அடையாளம் கண்ட நிலையான இலக்குகளை அடைய அடைந்துகொள்ள வேண்டிய இலக்குகள் தொடர்பில் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை.	சாதாரணமாக வருடாந்த வரவு செலவு ஒதுக்கீட்டினடிப்படையில் பல்வேறு வேலைத்திட்டங்களின் கீழ் கிராம மட்டத்தில் பல்வேறு விதத்தில் ரூபா 10,000.00 மட்டிலிருந்து செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு செயற்றிறன் இலக்கு நிச்சயித்தல் பிரயோக ரீதியாக நிச்சயிக்க முடியாத முரண்பாடான நிலை காரணமாக அவ்வாறானதொன்று செய்யப்படவில்லை.	இந்த வருடத்தில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பல்வேறு வேலைத்திட்டங்கள் மூலம் அடையாளம் காணப்பட்ட நிலையான இலக்கை அடைந்துகொள்ள பிரிவு மற்றும் உத்தியோகத்தர் மட்டத்தில் இலக்கு தீர்மானிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.
2018.01.24 ஆம் திகதிய 05/2018(1) இலக்கமுடைய சுற்றறிக்கையின் திருத்திய 2008.02.06 ஆம் திகதிய 05/2008 இலக்க அரச நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை பிரகாரம் பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் உரிய முறைப்படி தயாரித்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	2022 ஆம் வருடமாகும் போது இந்த அலுவலகத்திற்கு பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை	பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் 2024 ஆம் வருடத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நிறுவனத்தின் பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் அமுலாக்குதல் தொடர்பில் மேற்பார்வை செய்ய அல்லது மதிப்பீட்டுக்கு உட்படுத்த முறையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.		பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கருமங்கள் செய்யப்படுகிறதா என்பது பற்றி அந்தந்த பிரிவுக்கு பொருப்பான பதவி நிலை உத்தியோகத்தரினால் பரிசோதிக்க முறையொன்று திட்டமிடப்பட்டுள்ளது.

2018.01.24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்கமுடைய அரச நிருவாக சுற்றறிக்கை ஒழுங்கு விதிகள் பிரகாரம் உரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட மனித வள திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் வருடத்திற்கு மனித வளங்கள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2024 ஆம் வருடத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.
தயாரிக்கப்பட்ட மனித வளங்கள் திட்டத்தின் மூலம் பணியாளர் ஒருவருக்கு குறைந்தளவு வருடத்திற்கு 12 மணித்தியால பயிற்சி சந்தர்ப்பங்களை உறுதிப்படுத்தியிருக்கவில்லை		2023 ஆம் வருடம் நிதி அமைச்சின் செயலாளரது 01/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை படி அந்தந்த உத்தியோகத்தர்களினால் சேவை அமைப்பிற்கு ஏற்ப தகைமை பெற்றுக்கொள்வதற்காக பூரணப்படுத்த வேண்டிய கட்டாய பயிற்சிக்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என அறிவித்துள்ளதால் மேலதிக பயிற்சி செயற்றிட்டங்களை செயற்படுத்த சந்தர்ப்பம் இல்லை. இந்த வருடத்தில் இருக்கும் வளங்களை பயன்படுத்தி பயிற்சி செயற்றிட்டங்கள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
நிறுவனத்தின் கணக்கு தொடர்பான கணக்காய்வு கருத்து , கீழ் மட்டத்தில் , குறைந்த மட்டத்தில் அல்லது சிறந்த மட்டத்தில் இருக்கவில்லை.	2022 ஆம் வருடத்தில் நிறுவனத்தின் நிதி கூற்றுகளில் காணப்பட்ட குறைபாடு காரணமாக கணக்காய்வு கருத்து கீழ் மட்ட கருத்தாக இருந்தது.	2023 ஆம் வருடத்தின் கணக்காய்வு கருத்து உண்மை மற்றும் சாதாரணமானது தெளிவான கருத்து கிடைக்கப்பெற்றுள்ளது.
அடையாளம் கண்ட செயற்றிறன் சுட்டியை அடைவது 24% விட குறைந்தளவில் காணப்பட்டது.	2022 ஆம் வருடத்தில் இந்த அலுவலகத்தினால் இலக்கை அடைந்துகொள்ளும் வீதம் 50% க்கும் 74% க்கும் இடைப்பட்டதாகும்.	2023 ஆம் வருடத்தில் இந்த அலுவலகத்தினால் இலக்கை அடைந்துகொள்ளும் வீதம் 50% க்கும் 74% க்கும் இடைப்பட்டதாகும்.
மாவட்ட மற்றும் பிரதேச போதைப் பொருள் ஒழிப்பு குழு கூட்டம் காலாண்டுக்கு 01 வீதம் கூட்டப்படாமலிருந்தது.	நாட்டில் காணப்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதார இஸ்திரமற்ற நிலை காரணமாக 2022 ஆம் வருடத்தில் மாவட்ட மற்றும் பிரதேச போதைப் பொருள் ஒழிப்பு குழு கூட்டம் நடாத்தவில்லை.	
சிறுவர் உரிமை தொடர்பான மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு காலாண்டுக்கு 01 வீதம் கூட்டப்படாமலிருந்தது.	சிறுவர் உரிமை தொடர்பான மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு முதலாம் காலாண்டு கூட்டம் 2022.03.11 ஆம் திகதி நடாத்தப்பட்டுள்ளதுடன், அந்த வருடத்தினுள் நாட்டில் காணப்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதார இஸ்திரமற்ற நிலை காரணமாக ஏனைய காலாண்டுகளில் குழு கூட்டம் நடாத்தப்படவில்லை.	2023 ஆம் வருடத்தின் காலாண்டு கூட்டம் 04 உம் நடாத்தப்பட்டுள்ளதுடன், 2024 வருடத்திலும் தற்போது முதல் காலாண்டு 02 இலும் நடாத்தப்பட்டுள்ளது.
2005 இன் 13 ஆம் இலக்க இலங்கை இடர் முகாமைத்துவ சட்டத்தின் படி அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் நடாத்தப்படவில்லை	2022 ஆம் வருடத்தில் அனர்த்த குழு 04 மிஹிந்தலை, நொச்சியாகம, மஹவிலச்சிய மற்றும் கலன்பிந்துனுவெவ பிரதேச செயலகப் பிரிவுகளில் நடாத்தப்பட்டுள்ளது. அதே போன்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழு காணப்பட்ட அனர்த்த நிலையை கருத்திற்கொண்டு	2023 ஆம் வருடத்தில் மாவட்ட அனர்த்த குழு 2023.11.14 ஆம் திகதி நடாத்தப்பட்டுள்ளதுடன் பிரதேச குழு தேவையை கருத்திற்கொண்டு மஹவிலச்சிய மற்றும் நொச்சியாகம பிரதேச செயலகங்களில் மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளது. இந்த வருடத்திற்கு எதிர்காலத்தில்

	தேவைக்கு ஏற்றவாறு வருடத்திற்கு ஒரு முறை கூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	காணப்படும் நிலையினை கருத்திற்கொண்டு தேவைக்கு ஏற்ப குழு கூட்டம் நடாத்தப்படவுள்ளது.
திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களினால் வழங்கப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களளவு 50% விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.	2022.04.26 ஆம் திகதிய நிதி அமைச்சின் வருடாந்த வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 படி பயிற்சி நடாத்துதல் நிறுத்தியமை மற்றும் அப்போது நாட்டில் காணப்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதார இஸ்தீரமற்ற தன்மை இதற்கு காரணமாக அமைந்தது.	2023 ஆம் வருடம் நிதி அமைச்சின் செயலாளரது 01/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை படி அந்தந்த உத்தியோகத்தர்களினால் சேவை அமைப்பிற்கு ஏற்ப தகைமை பெற்றுக்கொள்வதற்காக பூரணப்படுத்த வேண்டிய கட்டாய பயிற்சிக்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங்க வேண்டும் என அறிவித்துள்ளதால் மேலதிக பயிற்சி செயற்றிட்டங்களை செயற்படுத்த சந்தர்ப்பம் இல்லை. இந்த வருடத்தில் இருக்கும் வளங்களை பயன்படுத்தி பயிற்சி செயற்றிட்டங்கள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கையொப்பம்/ ஈ.எம்.சீ.ஹேரத்
பிரதான கணக்காளர் (பதில்)
மாவட்ட செயலகம்,
அநுராதபுரம்.

E.M.C. Herath
Chief Accountant (Acting)
For District Secretary

கையொப்பம்/ கே.ஜீ.ஆர்.விமலசூரிய
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம்,
அநுராதபுரம்.

K.G.R. Wimalasooriya
District Secretary
Government Agent
Anuradhapura

செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05.

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்